காலை முரசு

பக்கங்கள்:-14

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 05 | செவ்வாய்க்கிழமை | 22.10.2024 | அதிர்வு 81

## கறுப்புப் பணம் பற்றியும் விசாரணைகள் ஆரம்பம்

பண முதலைகளால் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணம் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அரச தரப்பில் இருந்து அறியமுடிகின்றது. 05



# வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது குறித்து பிரதமருடன் பேச்சு

### தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

“வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கடந்த வாரம் கலந்துரையாடியிருக்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இது சம்பந்தமாக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக சில இணக்கப்பாடுகளும் எட்டுப்பட்டுள்ளன.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 05

# பொதுத்தேர்தலின் பின்பு அமையும் புதிய அரசிலும் ஹரிணியே பிரதமர்

### அமைச்சர் விஜித ஹேரத் உறுதி



வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையும் புதிய அரசிள் பிரதமர் பதவியில் மாற்றம் வராது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

25 பேரடங்கிய புதிய அமைச்சரவையில் பிரதமர் பதவி கலாநிதி ஹறிணி அமரசூரியவுக்கே வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்குச் சட்டரீதியாக கிடைக்க வேண்டிய விடயங்கள் வழங்கப்படும் என்றும், அதற்கு மேலதிகமாக எதுவும் வழங்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.




வடக்கில் தேர்தல் பணிகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இவ்வளவு காலமும் இடமளிப்பதில்லை.

அவர்களின் நியமனம் அரசியல் பின்புலத் தொடர்புடையது என்ற கருத்து நிலைப்பாடு நிலவுவதும் இதற்கு ஒரு காரணமாக இருந்தது.

இதுவரை தேர்தல்பணி வழங்கப்படாத சமுர்த்தி உத்தியோகத்தர்களிற்கு இம்முறை தேர்தல் பணி வழங்க திட்டமிடப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் அதிக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரசியல் ரீதியிலான நியமனம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் கடந்த காலங்களில் தேர்தல் பணியில் அவர்களை ஈடுபடுத்த சில அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

இருந்தபோதும் தற்போது தேர்தல் பணியின் போது சாதாரண எழுதுநர் பணிக்குரிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை 05





# சம்மாந்துறையில் கைக்குண்டு மீட்பு!

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சம்மாந்துறை, பசார் 7ஆம் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை மாலை கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கட்டட வேலைக்காக மண்ணைப் பயன்படுத்தும்போதே குறித்த கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டவர்களில் கைக்குண்டைக் கண்டதாகக் கூறப்படும் நபர் உடனடியாக 119 எனும் பொலிஸ் அவசர பிரிவுக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார் கைக்குண்டுடை பார்வையிட்டதுடன், கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக குண்டு செயலிழக்கும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் குற்றவியல் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்று கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றி செயலிழப்பு செய்யவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்ப்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் இன்னும் கையளிக்கப்படவில்லை

கொழும்பு 7 இல் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச உத்தியோகபூர்வ இல்லங்களைக் காலிசெய்யுமாறு சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்குஅரசால்அறிவிக்கப்பட்டபோதிலும்அவைஇன்னும்கையளிக்கப்படவில்லை என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

மொத்தம் 34 இல்லங்களில் 29 இல்லங்களின் சாவிகள் இன்னும் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




# பணவீக்கத்தில் வீழ்ச்சியடைந்து

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த செப்டம்பர் மாதத்தில் வீழ்ச்சிய டைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 1.1 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படை யிலான முதன்மை பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் 0.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம் கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 2.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவு பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் 0.5 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் உணவல்லா பணவீக்கம் 0.2 சதவீதமாகப் பதிவாகியிருந்தது.

அது செப்டெம்பர் மாதத்தில் 0.7 சதவீதமாகப் பதிவாகி யுள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக் களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 738,659 பேர் தகுதி



எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக 759,210 தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 20,551 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தபால் மூல விண்ணப்பங்களின் படி, 738,659 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஐந்து நாள்கள் இடம்பெறவுள்ளன.

அதன்படி, பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக் களிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங் கள், பொலிஸ் நிலையங்களில் இந்த மாதம் 30 ஆம் திகதியும் அடுத்த மாதம் 4 ஆம் திகதியும் இடம்பெறவுள் ளன.

அத்துடன், ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

மேற்படி தினங்களில் வாக்களிக்க முடியாதவர்க ளுக்காக அடுத்த மாதம் 7ஆம் 8 ஆம் திகதி வாக்களிக் கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.




# உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புக்கான இடைக்காலத் தடை தொடர்ந்தும் நீடிப்பு

கடந்த அரசாங்கத்தின் போது பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த இடைக்காலத் தடை உத்தரவு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஜூன் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தொழில் ரீதியான தொண்டர் ஆசிரியராக பணியாற்றும் தாம், உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்ததாகவும், இலங்கை ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

# செவ்விளநீர் விலை சடுதியாக அதிகரிப்பு



தேங்காய் விலை வேகமாக அதிகரித்து வருவதால், சில பகுதிகளில் தேங்காய் 180 முதல் 200 ரூபா வரை விற்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேலும், கொழும்பைச் சுற்றியுள்ள சில பகுதிகளில் செவ்விளநீர் 160 முதல் 200 ரூபா வரை விற்கப்படுகிறது.

இதனிடையே, ஒரு சிறிய தேங்காய் 120 முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தேங்காய் விலை உயர்விற்கு மத்தியில் சந்தையில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# சுவரொட்டிகளை ஒட்டிய ஐவர் கைது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை, தேர்தல் சட்டங்களை மீறி ஒட்டிய ஐந்து பேர் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்தவர்கள் பொரளை மயானத்திற்கு அருகில் சுவரொட்டிகளை ஒட்டிய போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து பெருந்தொகையான சுவரொட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், சுவரொட்டிகளை ஒட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதிகளிடம் 29 அரச வாகனங்கள்!



முன்னாள் ஜனாதிபதிகளிடம் 29 அரச வாகனங்கள் உள்ளன என்றும் , அவற்றை மீளக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றுள் டி ஆறு ரக வாகனங்கள் 5, அம்புலன்ஸ் ஒன்றும் அடங்குகின்றன என்றும் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவிடம் 8 வாகனங்களும், ரணில் விக்கிரமசிங்கவிடம் 11 வாகனங்களும் உள்ளன என்று கூறும் அநுரகுமார அரசு அவற்றை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

என்பதனால் இம்முறை சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குவதாகத் தெரிவித்து நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தினால் தேர்தல் பணிக்குச் செல்ல சம்மதம் தெரிவிக்கும் சமுர்த்தி உத்தியோகத்தர் விவரம் திரட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இம்முறை சமுர்த்தி உத்தியோகத்தர்களும் தேர்தல் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர் என அறியப்படுகின்றது.

இந்தச் செய்தியைப் பார்த்ததும் புதிதாக எதிர்ப்புக் கிளம்பினாலும் கிளம்பிவிடும்...!

\+ + +

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான அதிசொகுசு ஜீப் மற்றும் கார் ஆகியன முன்னாள் துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனுக்குச் சொந்தமான கண்டி அனிவத்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த இரண்டு அதிசொகுசு வாகனங்களினதும் சட்ட ரீதியான உரிமை தொடர்பிலான விசாரணைகளில் உரிமையை சம்பந்தப்பட்டோரினால் நிரூபிக்க முடியாமையினால் அவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதிசொகுசு பி.எம்.டபிள்யூ ரக கார் ஒன்று மற்றும் ப்ராடோ ரக ஜீப் ஆகியனவே சிக்கியுள்ளன.

கண்டி மஹய்யாவ பிரதேசத்தில் வாகன விற்பனை நிலையமொன்றுக்கு உரிமையாளரான ரோஹித அபேகுணவர்தனவின் மருமகன், அரச உயர் பதவியில் இருந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்த இரு வாகனங்களும் சட்ட விரோதமாக நாட்டினுள் கொண்டுவரப்பட்டவையா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாக தெரவிக்கப்படுகிறது.

அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் துறைமுக அமைச்சராக ரோஹித அபேகுணவர்தன இருந்தவர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.....!

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வடமராட்சியில் நடைபெற்ற இளைஞர்களுடனான கேள்வி – பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இளைஞர்கள் தற்காலத்தில் வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள். கடந்த தேர்தல் காலங்களில் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவோம் என்ற வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம். அதற்கான சில முன்னெடுப்புகளை நாங்கள் ஏற்கனவே கடந்த நாடாளுமன்ற காலத்திலும் செய்திருந்தோம்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலே கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அதன்பின்னர் நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்தது. அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டபாயவோடு நாங்கள் வடக்கு – கிழக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைக் கையளித்திருந்தோம். நாட்டினுடைய ஒரு பகுதி பொருளாதாரத்தில் வளர்ச்சியடைகின்றபோது அதன் பலன் முழுநாட்டையும் சென்றடையும் என்ற விடயத்தையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

அதன்போது வடக்கு – கிழக்குக்கான அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பு செய்யப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இடையிலே நாட்டிலே ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியால் வடக்கு – கிழக்குக்கான அபிவிருத்தி நிதியக் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சித் தலைவர்களையும் இணைத்து பொருளாதார மேம்பாடு தொடர்பான கூட்டங்களை நடத்தினோம். சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்க வேண்டும் என்று அப்போதைய அரசை வலியுறுத்தி 12 கட்சித் தலைவர்களுடைய கையொப்பத்தோடு ஒரு ஆவணம் ஒன்றையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இருந்தோம்.

வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியம் ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியா, ஐரோப்பிய நாடுகள் உட்பட பல சர்வதேச நாடுகளுடனும் பேசியிருக்கின்றோம்.

அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவதற்கு நீண்ட காலம் செல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் விசேட காரணமாக நாடு பாரிய பொருளாதாரம் வீழ்ச்சிக்கு உள்ளானமையும் அதன் பின்னர் ஜனாதிபதிகள் மாற்றமடைந்ததையும் கூறலாம்.

கோட்டபாய அரசோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதைப் போல் பின்னர் ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்கவிடமும் வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியம் தொடர்பான அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தோம்.

தற்போது நாட்டில் மீண்டும் ஆட்சி மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது. தற்போது பிரதமராகப் பதவியேற்றுள்ள ஹரிணி அமரசூரியவிடமும் வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியம் பற்றிய விடயங்களைச் சென்ற வாரமும் கலந்துரையாடியுள்ளோம். அது நாட்டினுடைய வளர்ச்சிக்குப் பங்காற்றும் என்ற விடயங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தலுக்கு பின்னர் இது சம்பந்தமாக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக சில இணக்கப்பாடுகளும் எட்டுப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுப்போம்." – என்றார்.

## கறுப்புப் பணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் மனோரா மற்றும் பண்டோரா ஆவணத்தில் வெளியிடப்பட்ட பெயர் விபரங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் என்றும் அறியமுடிகின்றது.

# தொலைபேசி அழைப்புகளூடான நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன

## பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிப்பு




போலி தொலைபேசி அழைப்புகளின் ஊடாக இடம்பெறும் நிதி மோசடிகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களுக்கு அழைப்புகளை மேற்கொண்டு அவற்றின் முகாமையாளர், சிரேஷ்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் விபத்துகளில் சிக்கியுள்ளதாகவும் அவர்கள் பயணித்த வாகனங்களை திருத்துவதற்காக ஒருதொகை பணம் தேவைப்படுவதாகவும் தெரிவித்து மோசடிகள் இடம்பெறுவததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காக அவசரமாக 10,000 வைப்பிலிடுமாறு தெரிவித்து தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு 9 டிப்போகளுக்கு போலி தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் ஆராய்ந்த போது அவை உயிரிழந்தவர்களின் அல்லது வெளிநாட்டவர்களுக்கு சொந்தமானதென தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# லொஹான் ரத்வத்தயின் செயலாளர் உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைப்பு




முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் பிரத்தியேக செயலாளர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் கட்டுகஸ்தோட்டை மஹய்யாவ பகுதியிலுள்ள அலுவலகத்திற்கு அருகிலுள்ள வீட்டில் அவரது பிரத்தியோக செயலாளர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.


அவரிடம் அனுமதி பெற்ற துப்பாக்கி இருந்துள்ளதுடன் அதனூடாகவே இந்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேசச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# திறைசேரி முறிகளை ஏலத்தில் விட இலங்கை மத்திய வங்கி தீர்மானம்

125,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகளை நாளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கான விலைமனுக்களை நாளை முற்பகல் 11 அணி வரை சமர்ப்பிக்க முடியும்.

அத்துடன், இதற்கான கொடுப்பனவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதி மேற்கொள்ள முடியுமெனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




# அந்தமான் கடற்பிராந்தியத்துக்கு 3 நாள்களுக்குச் செல்லவேண்டாம்

மத்திய கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் வடக்கு அந்தமான் கடற்பிராந்தியங்களுக்கு நேற்று முதல் 3 நாள்களுக்கு பயணிப்பதைத் தவிர்க்குமாறு கடல்சார் தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேற்படி கடற்பிராந்தியங்களில் காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைந்து வருகின்றமையினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்ததாழ்வுநிலைநாளைஅளவில்புயலாகவலுப்பெறுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது மேற்படி கடற்பிராந்தியங்களில் கடல்சார் தொழிலில் ஈடுபடுவோரும் மீனவர்களும் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## புலமைப்பரிசில் வினாத்தாள் விவகாரம்:

# மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கிடைத்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அறிக்கை

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

சர்ச்சையை ஏற்படுத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் தொடர்பான தமது பரிந்துரைகளை விரைவில் முன்வைக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேற்படி வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணை அறிக்கை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர் தமது ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெறும்வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அண்மையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதனையடுத்து, மேற்படி வினாத்தாளின் 3 வினாக்கள் கசிந்துள்ளதாகவும் அதற்கான புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இதனிடையே, சர்ச்சையை ஏற்படுத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் அண்மையில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விசாரணை அறிக்கைகள்

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் விசாரணை பற்றிய அறிக்கைகளின் விடயம் இவ்விவகாரத்தில் புதிய திருப்பத்தை நோக்கி நகர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் குண்டு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்த இரண்டு ஜனாதிபதி ஆணை குழுக்களின் விசாரணை அறிக்கைகள் இப்போது புதிய சர்ச்சைகளைக் கிளப்பி இருக்கின்றன.

ஒய்வு பெற்ற நீதியரசர்கள் எஸ்.ஐ.இமாம் மற்றும் எ.என்.ஜே.டி.அல்விஸ் ஆகிய இருவர் தலைமையிலான இரண்டு வெவ்வேறு ஆணை குழுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார்.

தம்முடைய ஜனாதிபதி பதவிக்காலம் முடிவடைவதற்கு சில மாதங்களுக்கு முன்னரே அந்த இரண்டு ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றைப்பகிரங்கப்படுத்தவும் இல்லை வெளியிடவும் இல்லை. நிரந்தரமாக அமுக்கிக் கொண்டார்.

இந்தக் குண்டுத் தாக்குதல் விவகாரங்களில் உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துவேன் என்று உறுதிமொழி அளித்து, அதன் அடிப்படையில் ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றிப் பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இப்போது புதிய ஜனாதிபதி பதவியேற்ற கையோடு, இந்த அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இவரும் ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் கடக்கின்ற நிலையிலும் ரணில் விக்கிரமசிங்க போல அந்த அறிக்கைகளை அம்பலப்படுத்தவில்லை. மக்களுக்குப் பகிரங்கப்படுத்தவில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் மேற்படி அறிக்கைகள் தம்முடைய கைகளுக்கு கிடைத்திருப்பதாக தெரிவித்து அதனை அரசு ஒரு வாரத்துக்குள் வெளியிடாவிட்டால் தாம் பகிரங்கப்படுத்துவார் என்று அறிவித்த உதய கம்மன்பில்ல, நேற்று அவற்றில் ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். மற்ற அறிக்கை அடுத்த வாரத்தில் வெளிவரும் என்று கோடி காட்டப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கைகளின் படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தகவல்களை மறைத்த முக்கியமானவர்களில் ஒருவராக இப்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்தினவின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாக உதய கம்மன்பில்ல, தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைகளில் ஒன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகரவுக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடர வேண்டும் என்று பரிந்துரைத்திருப்பதாகவும் உதய கம்மன்பில்ல குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையாக இருக்கலாம். இதுவரை வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டு இருந்த ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் மேற்படி இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடும்.

ஆனால் அந்த ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகளின் நம்பகத்தன்மை பற்றிய உறுதிப்பாடு இல்லாமல் இந்த குற்றச்சாட்டுகளை அப்படியே விழுங்குவது பொருத்தமற்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இதனை, இந்தக் குண்டு தாக்குதலினால் திகம் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுடைய மதத் தலைவரான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டி இருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

மேற்படி ரணில் விக்கிரமசிங்க நியமித்த இரண்டு ஆணைக்குழுக்களும்தமது அறிக்கைகளில் குறிப்பிட்ட விடயங்கள், ஏற்கனவே இவ்விடயத்தை ஆராய நியமிக்கப்பட்ட ஆணை குருக்களின் அறிக்கைகளை அப்படியே ஒத்திருக்கின்றன எனப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிடுகின்ற வகையில் அவதானத்தில் கொள்ள வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பதவி நிலையைப் பெற்றுள்ள இரண்டு அதிகாரிகள் தொடர்பாகவே இந்த இரண்டு அறிக்கைகளிலும் புதிதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று பேராயர் சுட்டுகின்றார்.

ஆட்சியில் இருக்கும் அரசுகள் தமக்கு தவையான அரசியல் நலன்களுக்காக இத்தகைய அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு எழக்கூடிய விதத்தில் அறிக்கைகளை சமர்ப்பிக்க வழிப் படுத்தப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை கர்தினால் வெளிப்படையாகக் கூறுவதையும் அவதானிக்க வேண்டும்.

அதாவது இந்த அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் வெளிவரத்தக்க வகையில்அரசியல்இலக்கோடுஇத்தகைய அறிக்கைகளை வெளிக் கொண்டு வரும் நடவடிக்கை ரணில் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பேராயரின் கருத்து நிலைப்பாடு ஊடாக பிரதிபலிக்கப்படுவது கவனிக்கத்தக்கது.



# திருமாவளவன் முதல்வராக கூடாதென எல்.முருகன் கூறியதை எதிர்க்கிறேன்

## சீமான் தெரிவிப்பு

“உள்ஒதுக்கீட்டை எதிர்த்ததால் திருமாவளவன் முதல்வராகக் கூடாது என எல்.முருகன் கூறியதை எதிர்க்கிறேன். 2 முறை தோல்விடையந்த அவர் மத்திய அமைச்சராகும்போது திரு மாவளவன் முதல்வராகக் கூடாதா என்ற உணர்வு, உரிமை, உறவில் கூறுகிறேன்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பா ளர் சீமான் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சி கலந்தாய்வுக் கூட்டம் கரூரில் உள்ள தனியார் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்குபற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கருத்து தெரிவிக்கையில்,


“உள்ஒதுக்கீட்டை எதிர்த்ததால் திருமாவளவன் முதல்வராகக் கூடாது என எல்.முருகன் கூறியதை எதிர்க்கிறேன். 2 முறை தோல்விடையந்த அவர் மத்திய அமைச்சராகும்போது திரு மாவளவன் முதல்வராகக் கூடாதா என்ற உணர்வு, உரிமை, உறவில் கூறுகிறேன். தமிழர் என்றால் அதில் பிராமணர்க ளும் வந்துவிடுவார்கள் என்பதால் திராவிடரை கொண்டு வந்தனர். தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிடம் என்ற வார்த்தை வந்ததால்தான் கருணாநிதி அதனை தமிழ்த்தாய் வாழ்த் தாக்கினார்.

புதுச்சேரியில் பாரதிதாசன் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்து சிறப்பாக உள்ளது. நாங்கள் பொறுப்புக்கு வந்தால் அதையே தமிழ்நாட்டுக்கும் தமிழ்த்தாய் வாழ்த்தாக்கிவிடுவோம். பெரியார் மதுவுக்கு எதிராக தனக்குச் சொந்தமான தென்னை மரங்களை வெட்டினார். ஆனால், இன்றைக்கு சாராய ஆலை நடத்திக் கொண்டு பெரியாரை பற்றி பேசுகிறார்கள். பெண்களுக்கு சம உரிமை வழங்குவதில்லை. சிறுபான்மை எனக்கூறிக் கொண்டு அவர்களுக்கு என்ன நன்மை செய்துள்ளார்கள். அவர்கள் கேட்பது உரிமை சலுகையல்ல.

இடஒதுக்கீடு வழங்குவதாக கூறுகின்றனர். ஆனால், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த என்ன தயக்கம்? கருணா நிதியின் பேரன் என்பது தவிர துணை முதல்வராக உதயநிதி யிடம் என்ன தகுதி உள்ளது? பிறப்பால் கிடைக்கும் உயர்வு தான் சனாதனம். சனாதனத்தை முதலில் உங்கள் வீட் டில் ஒழியுங்கள். துணை முதல்வராக வேறு ஒருவருக்கும் தகுதியில்லையா?

வாக்குக்கு பணம் கொடுப்பதுதான் திராவிடம். திமுக கூட்டணியில் உள்ளவர்கள் நான் பிரபாகரன் படத்தை வைத் திருப்பதால் என்னோடு கூட்டணி வைக்கத் தயங்குவார்கள். 8 சதவீதம், 16 சதவீதமாக, 32 சதவீதமாக வாக்கு சத வீதம் உயர்ந்தால் கூட்டணிக்கு வருவார்கள், காசு கொடுக்கா மலும் வெற்றி பெறலாம் என தெரிந்து கொள்வார்கள். நம்மைப் பொறுத்தவரை எப்போதும் தனித்துப் போட்டி தான்.

நான் படபடவென பேசுபவன். விஜய் நிதானமானவர். த.வெ.க. மாநாட்டுக்கு பிற கட்சியினர் செல்வது சரியாக இருக்காது. முதலில் அவர் தனது கொள்கைகளை அறிவிக் கட்டும். தி.மு.க. தனித்து வெற்றிபெற முடியாது என்பதால், கூட்டணி வைத்து ஆட்சியை பிடிக்குமாம். ஆனால், கூட்டணி அமைச்சரவைக் கேட்டால் முடியாது என்பார்களாம். தி.மு.க. பா.ஜ.கவை நெருங்கவில்லை. பா.ஜ.கவுடன் குடும்பமே நடத்திக் கொண்டுள்ளது. பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் முதல்வர் உள்ளிட்டவர்கள் மீது வழக்கு உள்ளது. ஆனால், தமிழக முதல்வர் மீது வழக்குகள் இல்லை. முதல்வர், துணை முதல்வரை பிரதமர் சந்தித்துப் பேசுகிறார். அமைச்சர் செந் தில் பாலாஜி மீதான வழக்கு தி.மு.க. போட்ட வழக்கு என்று முதல்வரே கூறியுள்ளார்.”– என்றார்.







# பிரிவினைவாத அரசியலை சீமான், திருமாவளவன் கைவிட வேண்டும்

## தமிழக பா.ஜ.க. தெரிவிப்பு

"இந்தியாவில் பிறந்து எந்த மாநிலத்தில் எந்த மொழியை தாய்மொழியாக கொண்டாலும் சாதி, இன, மத வேறுபாடு இன்றி அனைவருமே இந்தியன்தான் என்பதை சீமான் புரிந்து கொள்ள வேண்டும். தொல்.திருமாவளவனுக்கும் சொல்லித் தர வேண்டும். யார் தமிழன், யார் இந்தியன் என்கிற புரிதல் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு மட்டும் சரியாக விளங்காதது தமிழகத்தின் சாபக்கேடாக உள்ளது."

– இவ்வாறு தமிழக பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் ஏ.என். எஸ். பிரசாத் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக மக்களின் கவலைகளைப் போக்க, சிந்திப்பதை விட்டுவிட்டு, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை மறந்துவிட்டு, கூட்டணி ஆட்சியில் அதிகாரம், முதல்வர் கனவு என அவசர அரசியல் கருத்துக்களை அள்ளி தெளித்து தான் ஒரு முற்போக்கு அரசியல்வாதி இல்லை என்பதை திருமாவளவன் நிரூபித்துவிட்டார். தமிழக அரசியல் களத்தில் சுயநல அரசியல் விளம்பரத்துக்கும், தனிப்பட்ட அரசியல் ஆதாயத்துக்கும் முன்னுரிமை அளித்து செயல்படும் அரசியல் வியாபாரிகளை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய சூழ்நிலை தற்போது அனைவருக்கும் உருவாகியுள்ளது

எந்த நோக்கத்துக்காக கட்சி ஆரம்பித்தோம் என்பதை மறந்து, தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் முக்கியத் தலைவர்களின் வழிகாட்டுதலில்தான் என் கட்சிப் பயணிக்கும் என் அரசியல் பாதை இருக்கும் என் இயக்கத்துக்காகவும், என் மக்களுக்காகவும் என் வாழ்க்கையை அர்ப்பணித்து தமிழக மக்களின் உரிமைக்கும் தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபடுவேன் என்றெல்லாம் கூக்குரல் இட்டு இன்று பாதையை மறந்த ஆடுகளாய், முதல்வர் கனவில் மிதந்து வருகிறார்கள்.

ஒருவர் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்றார். சரண்டர் ஆனார். மீண்டும் நானே தமிழக முதல்வர் என்று கூறுகிறார். மற்றொருவர் இந்த உலகத்தில் நடக்காததை நடக்க முடியாததை மட்டுமே பேசி, மக்களை ஏமாற்றும் அரசியல் மேஜிக் வித்தையை ஒரு நடிகராக, இயக்குநராக சிறப்பாக திரைக்கதை அமைத்து, தான் தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகி விட்டோம் என்ற மமதையில் தமிழ்த்தாய் வாழ்த்து தேவையில்லை என்று விதண்டாவாதமாக, பயங்கரவாதி போல் பேசுகிறார். யார் தமிழன், யார் இந்தியன் என்கிற புரிதல் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு மட்டும் சரியாக விளங்காதது தமிழகத்தின் சாபக்கேடாக உள்ளது.

சாதி, மத, இன வேறுபாடு இன்றி, தமிழ் அன்னையின் மகனாக, தமிழகத்தில் பிறந்து, வளர்ந்து, தாய்த்தமிழ் பயின்ற அனைவருமே தமிழன் தான். பாரத தாயின் தவப்புதல்வனாக இந்தியாவில் பிறந்து எந்த மாநிலத்தில் எந்த மொழியை தாய்மொழியாக கொண்டாலும் சாதி, இன,மத வேறுபாடு இன்றி அனைவருமே இந்தியன்தான் என்பதை சீமான் புரிந்து கொள்ள வேண்டும். தொல்.திருமாவளவனுக்கும் சொல்லித் தர வேண்டும்.

பல ஆண்டுகளாக உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த காப்பாளன் போல நடித்துக் கொண்டு, தமிழகத்தில் பிரிவினைவான அரசியல் செய்து, உலகத்தின் மாவீரனாக போற்றப்படும் பிரபாகரனுடன் இலங்கை காடுகளில் துப்பாக்கி சத்தங்களுக்கு இடையே, விருந்து சாப்பிட்டேன் என்று கதை கதையாக, கண்டபடி பேசி, உலகெங்கும் கலெக்‌ஷன் செய்த சீமானுக்கு யார் தமிழன் என்பதை பகுத்துக் கூற உரிமையும் இல்லை. அருகதையும் இல்லை.

தமிழர்களின் வாழ்வு சிறக்க தமிழகம் செழிக்க, தமிழ் கூறும் நல்லுலகத்தின் எதிர்கால இளைய தலைமுறை மாணவர்களை இளைஞர்களை நல்வழிப்படுத்தி வள்ளுவன் வழியில் அரசியல் செய்பவனே தமிழன் என்பதை சீமான் புரிந்துகொள்ள வேண்டும். அதேசமயம் சீமானின் தமிழன்தான் தமிழகத்தை ஆள வேண்டும் இந்தக் கருத்தில் எனக்கு முழு உடன்பாடு உண்டு. சீமான் போன்ற பிரிவினைவாதிகள்தான் தமிழர் என்ற போர்வையில் தமிழகத்தை ஆளக் கூடாது என்ற கருத்தில் எனக்கு தெளிவு உண்டு.

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு முன்னும் பின்னும் சென்னை ராஜதானி முதல் இன்று வரை தாய்மொழியில் வேற்றுமை இருந்தாலும், தமிழ், தமிழர், தமிழ்நாடு மேல் அக்கறை கொண்ட தமிழர்கள் தான் ஆட்சி செய்தார்கள். இன்றும் தமிழர்கள் தான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, தமிழர்களை பிரிக்க முயலும் தமிழகத்தை அழிக்க முயலும் பிரிவினைவாத கருத்துக்களை கூறுவதை நிறுத்த வேண்டும்.

கட்சி ஆரம்பிக்கும் ஒவ்வொரு தலைவரும் முதல்வர் கனவு காண்பதில் தவறில்லை. கனவு கண்டவர் எல்லாம் முதல்வர் ஆனதும் இல்லை. இந்திய அரசியலை எடுத்துக் கொண்டால் டீக்கடையில் வேலை செய்தவர்களும், ஆட்டோ ஓட்டியவர்களும், பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்களும் மத்திய, மாநில அமைச்சர்களாக, முதல்வராக பிரதமராகவும் மக்கள் கடமையை ஆற்றிக் கொண்டுள்ளனர். அவர்கள் யாருமே முதல்வராக வேண்டும் என்று கனவு காணவில்லை. திட்டமிடவில்லை. தங்கள் பணியை செய்தார்கள்.

கடவுள் அருளால் மக்கள் கடமையை சிறப்பாக ஆற்றிய அனைவரையுமே, தமிழக, இந்திய மக்கள் எட்ட முடியாத உயரத்தில் வைத்து அழகு பார்த்தனர். பார்க்கின்றனர். அதேசமயம் சுயநல அரசியல், பிரிவினைவாத அரசியல் ஊழல் அரசியல், மதவாத அரசியல் செய்தவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டு ஆட்சியை இழந்து சிறையிலும் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

எனவே, மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியில் தற்பொழுது தமிழகம் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடிய சூழ்நிலையில், ஊழலாலும், நிர்வாக சீர்கேடுகளாலும் தமிழக மக்கள் கடும் மனவேதனையில் துன்பப்படும் நேரத்தில் தமிழக மக்களின் பிரச்சினையை தீர்க்கும் விதத்தில், மக்களை இணைக்கும் வகையில் விழிப்புணர்வை உருவாக்கி, ஆக்கபூர்வமான நேர்மறை அரசியலை முன்னெடுத்து, சுயநல அரசியல், பிரிவினைவாத அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைத்து, வான்புகழ் தந்த வள்ளுவனின் திருக்குறள் வழியில், அரசியல் நெறியில் ஒன்றிணைந்து மக்கள் பணியாற்றுவோம்," என்று அவர் கூறியுள்ளார்.





# இஸ்ரேல் பிரதமரை குறிவைத்து ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது

லெபனானில் இருந்து இஸ்ரேலின் சிசேரியா நகரை நோக்கி நேற்று முன்தினம் ட்ரோன் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

பிரதமர் நெதன்யாகுவின் இல்லத்தை குறிவைத்து இந்த ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ட்ரோன் ஒன்று சிசேரியாவில் உள்ள கட்டடம் ஒன்றை சேதப்படுத்தி உள்ளது, ஆனால் உயிரிழப்புகள் ஏதும் ஏற்பட வில்லை என்று இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் செய்தித் தொடர்பாளர், சிசேரியாவில் உள்ள நெதன்யாகுவின் வீட்டை நோக்கி ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதை பின்னர் உறுதி செய்தார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் தாக்குதலின் போது நெதன்யாகு வீட்டில் இல்லை என்றும் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதனிடையே மேலும் இரண்டு ஆளில்லா விமானங்கள் இடைமறிக்கப்பட்டதாகவும், வடக்கு டெல் அவிவில் உள்ள கிலிலோடில் எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கப்பட்டன என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. என்றாலும் பின்னர் அந்தப் பகுதியில் ட்ரோன் தாக்குதல் நடத்த முடியாது என்று தெரிவித்தது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடந்து வருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு மூளையாக இருந்த ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர், கடந்த புதன் கிழமை நடந்த மோதல் ஒன்றில் கொல்லப்பட்டார். வியாழக்கிழமை அவரின் உயிரிழப்பை இஸ்ரேல் அறிவித்தது. இது நடந்து சில நாள்களுக்கு பின்பு லெபனானில் இருந்து இந்த ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.















# அவுஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் உரையாற்றினார் பிரித்தானிய மன்னர்

அவுஸ்திரேலியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய மன்னர் சால்ஸ், தலைநகர் கன்பராவில் உள்ள அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியுள்ளார்.

மன்னர் தனது உரையினை நிறைவு செய்தபோது, அவுஸ்திரேலிய பழங்குடி இனத்தைச் சேர்ந்த சுயாதீன பெண் செனட் சபை உறுப்பினர் ஒருவர் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அவர் "நீங்கள் எனக்கு மன்னர் அல்ல" என சத்தமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரத்த குரலில் சுமார் ஒரு நிமிடம்வரை சத்தமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவரை, நாடாளுமன்ற பாதுகாவலர்கள் வெளியே அழைத்துச் சென்றுள்ளனர்.

பழங்குடி மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடப்பதாகத் தெரிவித்ததுடன், இது உங்கள் நாடு அல்ல எனவும், நீங்கள் எங்களுக்கு மன்னரும் இல்லை எனவும் கூச்சலிட்டுள்ளார்.

இதன் பின்னர் அரச தம்பதியர்களை வரவேற்கக் காத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களைப் பிரித்தானிய மன்னர் மற்றும் மகாராணி ஆகியோர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த நாடாக அவுஸ்திரேலியா திகழும் நிலையில், அதன் தலைவராகப் பிரித்தானிய மன்னரே பணியாற்றுகிறார்.

இருப்பினும், அந்த பதவியிலிருந்து மன்னரை நீக்குவது குறித்து அவுஸ்திரேலியாவில் அண்மைக் காலத்தில் விவாதங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# இன்றைய ராசி பலன்கள் -22.10.2024


மேஷம்

இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.


ரிஷபம்

இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மிதுனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.


கடகம்

எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.


சிம்மம்


இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணி யாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.


கன்னி

இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.


விருச்சிகம்

இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -22.10.2024




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES
40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park

